**IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM**

| | | |
|---|---|---|
| **MCOP No. 185/2024** | **நாள் – 26.03.2026** | **சாட்சி – ம.சா.1** |

*Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969).*

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெபா | கணவர் பெயர் | திரு. ஜெரால் சுரேஸ்குமார் |
| ஊர் | அம்மாசத்திரம் | தாலுக்கா | கும்பகோணம் |
| தொழில் | தையல் | வயது | 41/2026 |

**முதல் விசாரணை:**

நான் அசல் மனுவில் மனுதாரர் ஆவேன். மனுதாரர் தரப்பு சாட்சி 1 ஆக சாட்சியம் அளிக்கிறேன். மனுவில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். முதல் நிலை சாட்சியத்திற்கான பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது.

1. 01.03.2024 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை பதிவிறக்க நகல் ம.சா.ஆ.1
2. 26.02.2024 தேதியிட்ட கும்பகோணம் அரசு மருத்துவமனை வழங்கிய விபத்து பதிவேடு பதிவிறக்க நகல் ம.சா.ஆ.2
3. 11.03.2024 தேதியிட்ட TN–68–U–6726 என்ற பதிவெண் கொண்ட மோட்டார் வாகன ஆய்வறிக்கை பதிவிறக்க நகல் ம.சா.ஆ.3
4. 05.03.2024 தேதியிட்ட TN68 AL 8568 பதிவெண் கொண்ட மோட்டார் வாகன ஆய்வறிக்கை பதிவிறக்க நகல் ம.சா.ஆ.4
5. மாதிரி வரைபடம் பதிவிறக்க நகல் ம.சா.ஆ.5
6. 09.05.2024 தேதியிட்ட குற்ற இறுதியறிக்கை பதிவிறக்க நகல் ம.சா.ஆ.6

7. மருந்து வாங்கியதற்கான ரசீதுகள் அசல் ம.சா.ஆ.7 ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

8. மருந்து குறிப்பு சீட்டுகள் அசல் ம.சா.ஆ.8

9. நுண்கதிர் படம் அசல் ம.சா.ஆ.9

10. மனுதாரரின் ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) ம.சா.ஆ.10

11. மருத்துவ குழுமம் வழங்கிய இயலாமை சான்று நீ.ம.சா.ஆ.1

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :–**

நான் தையல் கடை வைத்துள்ளேனா என்றால் வீட்டில் வைத்து தையல் தொழில் செய்து வருகிறேன். விளம்பர பலகை, பெயர் பலகை வைக்கவில்லை. தெருவில் தெரிந்தவர்கள் மட்டும் துணியை தைக்க கொடுப்பார்கள் என்றால் சரிதான். நான் வேறு யாரிடமும் சம்பளத்திற்கு வேலை பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது கணவர் என்ன வேலை செய்கிறார் என்றால் குத்தகை நிலத்தில் விவசாயம் செய்து வருகிறார். எனது கணவரின் வருமானத்தையும், எனது வருமானத்தையும் சேர்த்துதான் குடும்பம் நடத்தி வருகிறோம் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் ஓட்டி சென்ற வாகனம் எனக்கு சொந்தமானதா என்றால் ஆமாம். விபத்து சமயத்தில் எனது வாகனம் united india insurance company ல் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் செட்டிமண்டபம் ஆனந்தம் stores முன்பு என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தில் ஆனந்தம் stores யை தாண்டினால் பைபாஸ் சாலை இணையும் என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்திற்கு அருகே பெட்ரோல் பங்க், ரெஸ்டாரண்ட், டைல்ஸ் கடை மற்றும் பல கடைகள் உள்ளது என்றால் சரிதான். அந்த சாலை ஆடுதுறை, மயிலாடுதுறை, சிதம்பரம், கடலூர் வழியாக சென்னை செல்லும் பிரதான சாலை என்றால் சரிதான். அதனால் இது போன்ற சாலைகளில் இரு சக்கர வாகன ஓட்டிகள் மற்றும் நடந்து

செல்பவர்கள் கவனமாக செல்ல வேண்டுமென்றால் சரிதான். மேற்கண்ட சாலையில் போக்குவரத்து மிகுதியாக இருக்குமென்றால் சரிதான். நான் என்ன காரணத்திற்காக விபத்து நடந்த தேதி அன்று அந்த சாலையில் சென்றேன் என்றால் எனது குழந்தையை டியூசன் வகுப்பில் இருந்து அழைத்து சென்றேன். விபத்து நடந்த நேரம் என்னவென்றால் இரவு 09.00 முதல் 09.30 வரை இருக்கும். என்னுடைய குழந்தையை எங்கிருந்து அழைத்து சென்றேன் என்றால் வட்டி பிள்ளையார் கோயிலிலிருந்து அழைத்து சென்றேன். அந்த நேரத்தில் தினமும் எனது குழந்தையை இரு சக்கர வாகனத்தில் நான்தான் அழைத்து வருவேனா என்றால் ஆமாம். அதனால் எனக்கு அந்த வழி எனக்கு பரிட்சியம் என்றால் சரிதான். அதனால்தான் விபத்து நடந்த அன்று அலட்சியமாக இரு சக்கர வாகனத்தை ஓட்டிச் சென்று விபத்தை நான் ஏற்படுத்திவிட்டேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த தேதி அன்று தலைகவசம் அணியவில்லையென்றால் சரியல்ல. நான் தலைகவசம் அணிந்து இருந்ததாக புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் அவ்வாறு தலைகவசம் அணிந்து சென்றிருந்தால் அதை குறிப்பிட்டு புகாரில் சொல்லி இருப்பேன் என்றாலும் தலைகவசம் அணியவில்லை என்பததால்தான் புகாரில் அவ்வாறு தலைகவசம் அணிந்திருந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. இரண்டு வாகனங்களும் ஒன்றுக்கொன்று நேராக மோதிக் கொண்டன என்றால் சரிதான். விபத்து நடந்த சாலை அகலமான தார் சாலை என்றால் சரிதான். விபத்து நடந்த சமயத்தில் எனது வாகனம் மற்றும் எதிரே வந்த வாகனத்தை தவிர மற்ற வாகனங்கள் வேகமாக சென்றுக் கொண்டிருந்தன என்றால் சரிதான். விபத்தில் இரண்டு வாகனங்களுக்கும் சேதம் ஏற்பட்டதா என்றால் எனது வாகனத்தின் முன்பக்கம் முழுவதும் நசுங்கிவிட்டது. எனது வாகனத்தை சரி செய்ய எங்கள் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு தொகையை வாங்கிவிட்டேன் என்றால் காப்பீட்டு

நிறுவனத்தில் ரூபாய்.3,900 கொடுத்தார்கள். நான் அதிகம் செலவு செய்திருந்தேன். காப்பீடு நிறுவனம் மூலமாக அளவையர் மதிப்பீடு செய்திருந்தார்கள் என்றால் சரிதான். விபத்து நடந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருந்தது என்றால் ஆறு நாட்கள் கழித்து நான் புகார் கொடுத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருந்தது. எதிரில் வந்த வாகனத்தின் உரிமையாளர் என் மீது புகார் கொடுக்கவில்லை என்பதை சாதகமாக எடுத்துக்கொண்டு நான் காலதாமதமாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எனக்கு எங்கே அடிபட்டது என்றால் வலது கையில் இரண்டு விரலில் அடிபட்டது. மேற்கண்ட இடத்தை தவிர வேறு எங்கும் அடிபடவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த பிறகு நான் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டேனா என்றால் ஒரு மணி நேரம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பிறகு வீட்டிற்கு சென்றுவிட்டேன். நான் மருத்துவமனையிலிருந்து சென்றுவிட்டதால் மருத்துவர் விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றில் no opinion என்று எழுதி உள்ளார் என்றால் சரிதான். நான் விபத்து சமயத்தில் நான் சென்றுக் கொண்டிருந்தபோது எதிரே வந்த வாகனத்தை பார்த்தேனா என்றால் நான் இடது ஓரமாக சென்றதால் கவனிக்கவில்லை. நான் கவனித்து சென்றிருந்தால் விபத்து நடந்திருக்காது என்றால் திடீரென்று அந்த வாகனம் குறுக்கே வந்ததால் விபத்து நடந்தது. எதிரே வந்த வாகனத்தை பார்க்காமல் சென்றேனா என்றால் நான் ஓரமாக சென்றபோது பக்கத்தில் இரண்டு கார்கள் எனக்கு இணையாக சென்றுகொண்டிருந்தன. அவ்வாறு எனக்கு இணையாக வாகனங்கள் சென்றிருந்தால் 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் வந்து மோத வாய்ப்பில்லை என்றால் அவர் overtake செய்து வந்தபோது விபத்து ஏற்பட்டது. அவ்வாறு overtake செய்தால் 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தை கார்கள் மோதி இருக்குமென்றால் அந்த கார்கள் எனக்கு எதிரே வந்ததால் 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநர் overtake செய்து மோதிவிட்டார். எனக்கு இணையாக கார்கள் வந்துவிட்டது என்று தவறாக

சொல்லிவிட்டேன். நாங்கள் இருவரும் வேண்டுமென்றே மோதிக்கொள்ள வில்லையென்றால் சரிதான். அந்த வாகனம் வேகமாக வந்து மோதியது. 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநருக்கு என் மீது மோத வேண்டும் என்ற எண்ணம் இல்லையென்றால் சரிதான். நான் வேகமாக சென்றேன் என்றால் 40 முதல் 50 கி.மீ. வேகத்தில் சென்றேன். எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லையென்றால் உரிமம் உள்ளது. அதனை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது வாகனம் பழைய வாகனம் என்றால் சரிதான். Bike ஐ காட்டிலும் Scooter வாகனத்தில் வேகமாக சென்றால் பிரேக் அடிக்கும் போது அந்த வாகனம் நிற்காது என்றால் சரிதான். நான் பிரேக் போட்டும் எனது வாகனம் நிற்கவில்லை என்றால் சரியல்ல. நான் பிரேக் போட்டவுடன் எனது வண்டி நின்றுவிட்டது. அவர் வாகனம் வந்து தான் மோதியது. நான் அவ்வாறு எனது வாகனத்தை நிறுத்தியிருந்தால் எதிரே வந்தவர் என் மீது மோதமால் தவிர்த்திருந்திருப்பார் என்றால் வேறு வழி இல்லை என்பதால் அவர் என் மீது மோதிவிட்டார். இந்த விபத்திற்கு நானும் எதிரே வந்தவரும் காரணம் என்றால் சரியல்ல. எனது வாகனத்தின் காப்பீடு நிறுவனத்தை தரப்பினராக நான் சேர்க்கவில்லை என்றால் சரிதான். எங்கள் இருவர் மீதும் தவறு இருக்கிறது என்பதால் எனது காப்பீடு நிறுவனத்தையும் சேர்த்து இழப்பீடு நான் கோரியிருக்க வேண்டும் என்றால் சரியல்ல. அதனால் 50 சதவீதம் இழப்பீட்டு தொகையில் தன்பால்கவனமின்மை விதியின் படி நான் பங்களிக்க வேண்டும் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்டது சாதாரண காயம் என்றால் சரியல்ல. நான் விபத்து நடந்தவுடன் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து கொண்டேன் என்றாலும், அங்கு இலவச சிகிச்சை அளிக்கப்பட்டது என்றாலும் சரிதான். அடுத்த நாள் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். தனியார் மருத்துவமனையில் எவ்வளவு செலவாகியது என்றால் அதற்கான செலவு ரசீதுகளை சமர்ப்பித்துள்ளேன். நான்

கோரியுள்ள இழப்பீடு மிக அதிகம் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

*Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.*

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2026.03.26 18:15:21 +0530

*Additional Chief Judicial Magistrate,*
*Kumbakonam.*